*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI:* https://doi.org/10.63300/tm07042026.12

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor | Multidisciplinary
Issue DOI: https://doi.org/10.63300/tm07042026

# The Lifestyle of Devarayaneri Narikuravars

**Dr. S. Punitha**[1*],
[1]Assistant Professor, Department of Tamil Studies, Holy Cross College (Autonomous), Tiruchirappalli – 620 002.
[*]Correspondence: punitha01081984@gmail.com

**Article Info**
Received on 21-Mar-2026, Revised on 27-Mar-2026, Accepted on 27-Mar-2026, Published on 01-April-2026

## ABSTRACT

This research article, titled "The Lifestyle of Devarayaneri Narikuravars," explores the socio-cultural and economic conditions of the Narikuravar community residing in the Devarayaneri colony near Tiruchirappalli. Despite the advancements of modern civilization, this community maintains unique traditional practices while gradually adapting to new social norms. The study examines various aspects of their daily lives, including their primary occupations—hunting and honey collection for men, and bead-making and selling for women. It details their dietary habits, distinctive traditional attire, and the transition from nomadic tents to government-provided housing facilities equipped with electricity and water. Furthermore, the paper analyzes their family structures, the status of women and children, educational challenges, and their unique "life cycle" governed by seasonal migrations to temple festivals for trade. The research concludes that while the community remains educationally and economically underdeveloped, government interventions and internal social shifts are slowly influencing their traditional way of life.

***KEYWORDS:*** *Devarayaneri, Narikuravar, Lifestyle, Hunting, Bead-making, Nomadic Tribes, Culture, Housing, Education, Family Structure, Traditional Occupations, Socio-economic Status.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI:* https://doi.org/10.63300/tm07042026.12

# தேவராயநேரி நரிக்குறவர்களின் வாழ்வியல்

**முனைவர் ச. புனிதா**, உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி

**ஆய்வுச் சுருக்கம் (Abstract)**

இக்கட்டுரை திருச்சி மாவட்டம், **தேவராயநேரி** பகுதியில் வாழும் **நரிக்குறவர்களின் வாழ்வியலை** விரிவாக ஆராய்கிறது. நவீன நாகரிக வளர்ச்சிக் காலத்தில் தங்களின் தனித்துவமான பண்பாட்டுப் பழக்கவழக்கங்களை மாற்றிக்கொள்ள இயலாத நிலையில் இருக்கும் இவர்களின் உணவு முறை, ஆடை அணிகலன்கள் மற்றும் குடியிருப்புகள் குறித்து இக்கட்டுரை விளக்குகிறது. குறிப்பாக, ஆண்களின் வேட்டையாடுதல் தொழில் மற்றும் பெண்களின் பாசி மணி கோர்த்தல், விற்றல் போன்ற பொருளாதாரச் செயல்பாடுகள் விரிவாகப் பேசப்படுகின்றன.

மேலும், அரசு வழங்கியுள்ள குடியிருப்பு வசதிகள், மின்சாரம், கல்வி நிலை மற்றும் குடும்ப அமைப்பு முறைகள் குறித்தும் இந்த ஆய்வு எடுத்துரைக்கிறது. நரிக்குறவ சமுதாயத்தில் பெண்களின் நிலை, அவர்களின் மறுமணம் மற்றும் சமூகக் கட்டுப்பாடுகள் குறித்த செய்திகளும் இதில் இடம்பெற்றுள்ளன. இறுதியில், இவர்களின் பொழுதுபோக்கு அம்சங்கள் மற்றும் பருவகாலங்களுக்கு ஏற்ப அவர்கள் மேற்கொள்ளும் வணிகப் பயணங்கள் (வாழ்க்கைச் சுழற்சி) அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

**முக்கியச் சொற்கள் (Keywords)**

தேவராயநேரி , நரிக்குறவர் , வாழ்வியல் , வேட்டையாடுதல் , பாசிமணிகள் , நாடோடி வாழ்க்கை , குடும்ப அமைப்பு , கல்வி நிலை , அரசு உதவிகள் , வாக்ரி போலி.

**முன்னுரை**

உலகில் வாழ்ந்து வரும் ஒவ்வொரு மனிதனுக்கும் உணவு> உடை> உறைவிடம் போன்றவை அடிப்படைத் தேவைகளாக அமைகின்றன. நாகரிகம் தொடர்ந்து உயர்ந்துகொண்டு இருக்கும் இக்காலகட்டத்தில்> பண்பாட்டுப் பழக்கவழக்கங்களோடு புதிய சமூக நடைமுறைகளை ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் நரிக்குறவர்கள் உள்ளனர். எனவே குறவர் என்ற பெயரில் அழைக்கப்படும் நரிக்குறவர்கள் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் உணவுகள்> ஆடை அணிகலன்கள்> தங்கியிருக்கும் வீடுகள்> தொழில்கள்> குடும்பச் சூழல்கள், பொழுதுபோக்குகள் ஆகிய கூறுகளை வாழ்வியல் எடுத்துக்காட்டுவதே இவ்வியலின் போக்காக அமைகிறது.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI:* https://doi.org/10.63300/tm07042026.12

**வாழ்வியல் பொருள்**

வாழ்வியல் பொருள் குறித்து அரு. மருத்துரை> “நவீனத் தொழில் நுட்பங்களுக்குப் பல தொழில்கள் ஆட்பட்டுவிட்டாலும் மக்களிடையே இன்றளவும் பல கூறுகள் மாற்றம் பெறாமல் உள்ளன. நாட்டுப்புற மக்களின் நம்பிக்கை> பொருளாதாரச் சூழல்> வாழ்க்கை அமைப்பு> தொழில்களின் மீது கொண்டுள்ள வழிபாட்டு உணர்வு ஆகியவற்றின் காரணமாகப் பலவும் மாற்றம் பெறாமல் தொடர்கின்றன. இவை மக்களின் நாகரிகம்> பண்பாடு ஆகியவற்றை வெளிப்படுத்தும் களங்களாகவும் விளங்குகின்றன” என்று குறிப்பிட்டுள்ளார். இத்தகைய வாழ்வியலின் அடிப்படைக் கூறுகளாக உணவு. உறைவிடம். அணிகலன்கள், தொழில்கள் போன்றவை விளக்கப்படுகின்றன.

**உணவு**

உணவு என்று கூறும் பொழுது ‘உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோர்’ என்ற முதுமொழியை நினைவுக் கொள்ள முடிகிறது.

“ஆறிடும் மேடும் மடுவும் போல
மாறிடும் செல்வம் மாநிலத்தீர்! - சோறிடும்
தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறும் உயர்ந்தது”2

என்று உணவுமுறைப் பற்றி ஔவைப் பாடல்களில் ஒன்று தெரிவிக்கின்றது. விதவிதமான உணவுகளைச் செய்வதில் நம்மவர்கள் கைதேர்ந்திருத்தனர். தாம் சமைத்த உணவு வகைகளைப் பிறருக்கு ஈந்து உவப்பதிலே இன்பம் கண்டனர்.

நரிக்குறவர்கள் நாடோடிகளாக வாழ்ந்தாலும்> குறிப்பிட்ட இடத்திலே மட்டும் சுற்றிசுற்றி வருகின்றனர். ஓர் ஊரிலிருந்து அடுத்த ஊருக்குக் குடி பெயர்ந்து செல்லும்பொழுது கூட்டமாகவே செல்கின்றனர். பொருளாதார வசதியுழ் குறைவாகவே உள்ளது. ஓரளவு வசதியிருப்பின் அவர்களது குலவழக்கப்படி தெய்வத்திற்குப் பலியிட்டும்> குடித்தும் செலவழிக்கின்றனர். அதன்பின் எச்சில் சோற்றையும்> வேட்டையாடுதலையும் நம்பி வாழ்கின்றனர். இவர்களுடைய முக்கிய தொழில் வேட்டையாடுதலாகும். இவர்கள் வேட்டையாடும் முறை தமிழ்நாடு முழுவதும் ஒரே முறையில் உள்ளது. வேட்டையாடுவதின் வாயிலாக பொருட்களைப் பெற்றுக் கொள்கின்றனர். சைவ உணவுகளைவிட> அசைவ உணவுகளான காட்டுப்பூனை> முயல்> எலி. கொக்கு> நரி போன்ற விலங்குகளை உட்கொள்கின்றனர்.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI:* https://doi.org/10.63300/tm07042026.12

**ஆடை அணிகலன்கள்**

‘ஆள்பாதி> ஆடை பாதி> ‘ஆடையில்லாத மனிதன் அரைமனிதன்’> ‘தோற்றம் தரும் ஏற்றம் ’ போன்ற தொடர்கள் உடையின் இன்றியமையாமையை உணர்த்துகின்றன.

“நூலை நூற்று ஆடையாக நெய்து அணிவதற்கு முன் மனிதச்சமுதாயத்தின் தொடக்கக் காலத்தில் தமிழர்கள் இலைகளையும். தழைகளையும் உடைத்துக்; கோர்த்து ஆடையாக அணிந்து கொண்டனர். மேலும்> மரப்பட்டைகளின் தோலை உரித்து மரவுரியாடையாகவும்> விலங்குகளின் தோலை உரித்து தோலாடையாகவும் அணிந்தனர். நூல் நூற்று ஆடை நெய்து அணியப் பழகிய பின்னர் பட்டாடை> பொன்னாடை என அணிந்து நாகரீகம் பெற்றனர்."3

ஆனால் நரிக்குறவ ஆடவர்கள் அரை நிருவாணமாக உடை உடுத்துகின்றனர். கோவணம்> ‘காச்சோ’ என்னும் இடுப்பில் அணியும் பை> தலையில் சிகப்பு வேட்டியிலான தலைப்பாகை> கழுத்தில் பல வண்ணமாலைகள், நரிப்பல் கோர்த்த மாலை போன்றவற்றை அணிகின்றனர். சிலர் வேட்டி> சட்டை உடுத்துகின்றனர். பாவாடை. மேல்சட்டை, தாவணி முதலானவற்றையும் கழுத்தில் பல வண்ணப்பாசி மணிமாலைகளையும் நரிக்குறவப் பெண்கள் அணிகின்றனர். இவையின்றி காப்புகள்> மோதிரங்கள்> காதணிகள்> மூக்குத்தி போன்றவற்றை அணிந்துள்ளனர். எப்பொழுதும் ஒரு பை தோளில் தொங்கும். தகரடப்பாவும் உள்ளே இருக்கும். சில சமயங்களில் அலுமினியப் பாத்திரங்களும் வைத்திருப்பர். அப்பாத்திரங்களைக் கொண்டு பிச்சையெடுக்கவும்> பிச்சையெடுத்ததைச் சமைத்து உண்ணவும். உணவு; சேகரிக்கவும். நீர் அருந்தவும் பயன்படுத்துகின்றனர். மேலும் பைக்குள் ஊசி> சீப்பு> கோணி ஊசி> பொட்டு போன்ற பொருட்களையும் வைத்திருப்பர்.

நரிக்குறத்திகள் சந்தையிலோ> கடைகளிலோ குறைந்த விலைக்குத் துணிகள் வாங்கித் தாங்களாகவே தைத்துக் கொள்கின்றனர். புடவையை இரண்டாகக் கிழித்து மேலாடையாக அணிகின்றனர். முட்டிக்கு மேல் தூக்கித் தைக்கப்பட்ட பாவாடையை இடுப்பில் சுருக்கம் வைத்து சுயமாகவே தைத்து அணிந்து கொள்கின்றனர். ஆடைகளைச் சரி செய்வதில் கவனமின்றி வயிறு> தொப்புள் தெரியும்படி அரைகுறையுடன் அலைகின்றனர். சிலர் மாராப்புத் துணியைத் தாவணி போன்று சுற்றி அதில் குழந்தையைக் கட்டிக் கங்காரு போலச் சுமந்து செல்கின்றனர்.

திருமணமான நரிக்குறவப்பெண்கள் கழுத்தில் இரண்டு சரம் உள்ள கீரமணித்தாலியையும்> மற்றவர்கள் பல வண்ணப்பாசிகளையும் அணிந்துகொள்கின்றனர். சவரி முடிக்கொண்டு ஒற்றை ஜடையாகவோ> இரட்டை ஜடையாகவோ பின்னிக் கொள்கின்றனர். கைகளில் அதிகமாக கண்ணாடி வளையல்களை அணிந்துகொள்கின்றனர். உதட்டிற்குச் சாயம் பூசிக் கொள்கின்றனர்.

Tamilmanam

கண்ணுக்கு மையும் முகத்திற்கு மஞ்சளும் பூசிக் கொள்கின்றனர். அவர்களது முகத்தோற்றத்திற்கு ஏற்றவாறு தலைமுடியினை வெட்டிக் கொள்கின்றனர். கைவிரல்களில் நகச்சாயத்தையும் பல வண்ணங்களில் பூசிக்கொள்கின்றனர். கால்களிலும் கைகளிலும் பச்சை குத்திக்கொள்கின்றனர். நரிக்குறவர்களின் குழந்தைகள் ஆடையின்றி அலைந்தாலும்> கழுத்தில் அணிந்திருக்கும் பாசி> மணிகளைக் கொண்டு எளிதாக அடையாளம் கண்டு கொள்ளலாம். அடிக்கடி வெற்றிலை போடும் பழக்கத்தால் பற்கள் கறையோடிக் கிடக்கும். இவர்களது தோற்றமே மற்ற சமுதாயத்தினரிடமிருந்து இவர்களை வேறுபடுத்திக் காட்டுகிறது.

**குடியிருப்புகள்**

பொதுவாக நரிக்குறவர் வாழும் குடிசை கரும்புத்தோகை> கோணி முதலியவற்றால் மூடப்பட்டிருக்கின்றது. சிறுசிறு குச்சிகளை வரிசையாகக் கட்டிய படல்களையே குடிசையின் கதவுகளாகப் பயன்படுத்துகின்றனர். மண்ணெண்ணெய் விளக்குகளைப் பயன்படுத்துகின்றனர். மழைக்காலங்களில் கூரை ஒழுகுவதால் துன்பப்படுகின்றனர். குடிசைத்தரையைச் சிலர் சாணம் தெளித்து மெழுகி வைக்கின்றனர். நாடோடிகளாக வாழ்க்கை நடத்தும் நரிக்குறவர்கள் சாலை ஓரங்களிலும> புறம்போக்கு நிலங்களிலும் சிறுசிறு குடிசைகள் அமைத்தும் வாழ்கின்றனர். சிலர் கூடாரம் அடித்து வாழ்கின்றனர். வெற்றிலை பாக்கு எச்சிலைத் போட்டுவிட்டு துப்பி அங்கேயே உறங்குகின்றனர். வேட்டைப் பொருள்களும்> கூண்டுகளும் இருக்கின்றன.; இவர்களின் வீட்டைச் சுற்றிக் குப்பைக்கூளங்களும்> பறவைக்குடிகளும் கிடக்கின்றன. நரிகள், குரங்குக்குட்டிகள் கோழிக்குஞ்சுகள்> புறாக்கள் போன்றவற்றையும் வளர்க்கின்றனர். பக்கத்தில் சாப்பிட்டு முடித்த பாத்திரங்கள் காய்ந்த நிலையில் கிடக்கின்றன. வீடுகள் அமைத்திருந்தாலும் மரத்தின் நிழல்களிலே படுத்து உறங்குகின்றனர். சமைப்பதற்கு ஆதிமனிதர்கள் போன்று கற்களைப் பயன்படுத்துகின்றனர். விடிந்ததும் வேட்டைக்குச் செல்கின்றனர்.

**அரசின் குடியிருப்பு வசதி**

சில ஊர்களில் வாழும் நரிக்குறவர்களுக்கு அரசு வீடுகள் கட்டித்தந்துள்ளது. அவற்றைப் போல் தேவராயநேரி காலனி என்ற இடம் இவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ளது. நரிக்குறவர்கள் தொந்தரவில்லாத இடமாகவும்> வேட்டையாடுவதற்கு எளிதாகவும் இருக்கும்படி தங்கும் இடத்தைத் தேர்ந்தெடுக்கின்றனர். அரசு இவர்களுக்கு நான்கு பக்கமும் சிமெண்ட்டால் செய்யப்பட்ட சாளரங்கள்> அறையைக் கொண்ட வீடுகளை வழங்கியுள்ளது. ஏறத்தாழ 300 குடும்பங்கள் அங்கே வசிக்கின்றன. அனைத்துக் குடும்பங்களுக்கும் தனித்தனியாக மனை தந்து> மின்சாரம்> தண்ணீர்க்குழாய் போன்ற வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. மேலும்

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI:* https://doi.org/10.63300/tm07042026.12

தொலைக்காட்சிப் பெட்டியும்> விறகுக்கு பதிலாகச் சமைப்பதற்கு கேஸ் அடுப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன. இவர்களின் வாழ்வை முன்னேற்றுவதற்காக 'ரெட்கிராஸ் சொஸைட்டி' என்ற அமைப்பு இவர்களுக்கு உதவி செய்கின்றது. குடும்ப வாக்காளர் அட்டைகள் அட்டைகள்> அங்கு வாழும் அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளன. இவர்களுக்கென்று தனியாக நியாயவிலைக் கடையும் அமைக்கப்பட்டுள்ளது.

**தொழில்கள்**

நரிக்குறவர்கள் வருமானம் பொருளாதார முறையைக் கொண்டது. வேட்டையாடுதல்> தேனெடுத்தல் ஆகியவற்றைத் தொழிலாகக் கொண்டு வேட்டையாடியதை விற்றும்> உண்டும் வாழ்ந்து வருகின்றனர். காடுகளில் இலைதழைகளைக் கட்டிக் கொண்டு வாழ்ந்தவர்கள்> நகரங்களில் குடியேறியதும் அரைகுறை ஆடைகளை அணிய ஆரம்பித்தனர். இவர்களின் தோற்றத்தினைக் கண்டு மற்ற இனத்தவர்கள் ஒதுக்குவதால் ஊருக்கு ஒதுக்குப்புறமாகத்; தன்னுடைய இருப்பிடத்தை அமைத்துக் கொள்கின்றனர். அவ்வாறு உருவாகியதே இந்த 'தேவராயநேரி' காலனி.

ஆண்கள் வேட்டைக்காக காட்டுக்குச் செல்கின்றனர். பெண்கள் ஊசி> மணி போன்றவற்றைத் தயாரித்து விற்று அவற்றில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு> அரிசி> பருப்பு> மளிகைப்பொருட்கள் போன்றவற்றை வாங்குகின்றனர். மேலும் ஆண்கள் போலி நரிக்கொம்புகளைக் தயாரித்து விற்கும் தொழிலையும் மேற்கொண்டுள்ளனர். நரிகளைப் பிடிக்க வலைவிரித்து வைத்து அதன் உள்ளே ஒருவன் கையில் பெரிய தடியுடன் உட்கார்ந்தவனாக நரியினைப் போல ஊளையிடுவான். அதனைக் கேட்கும் நரிகள் அக்குரலுக்குக் காரணம் என்ன என்பதனை அறிந்து கொள்ள ஓடிவரும். அவற்றை அவன் அடித்து வீழ்த்துவான். இதனை> இ. லோவென்தர் நேரில் கண்டு உரையாடியபோது “குருவிக்காரன் ஒருவன் அவரிடம் நரியைப் போல் ஊளையிட்டுக் காட்டியுள்ளான். அந்த குரல் நரியின் குரல் போலவே ஒலித்தது. அதனைக் கேட்கும் எந்த நரியும் அது தன் இனநரி எழுப்பும் ஒலியே எனக் கருதும்”4 என்று தம் கள ஆய்வுப் பணியில் விளக்கிக் கூறியுள்ளார்.

**ஆண்களின் தொழில்கள்**

ஆண்கள் துப்பாக்கி> உண்டிக்கல்> வலை> கவிட்டாவில் நாட்டுவெடி. ஆகியவற்றின் உதவியுடன் வேட்டையாடுதல் தொழிலைச் செய்கின்றனர். வேட்டையாடுதலின் மூலம் கிடைக்கும் பறவைகள்> விலங்குகள் ஆகியவற்றை வருமானத்திற்காக விற்கின்றனர். ஆட்டுக் கொழுப்பை வாங்கி வந்து சூடேற்றினால் நன்கு உருகிவிடும். இதனுடன் நீர் கலந்தால் கெட்டியாகிவிடும்.


Tamilmanam

வெண்ணெய் போன்று தோன்றும்> நாலைந்து கூழாங்கற்களை நூலால் கட்டி வெடிமருந்து சேர்த்து அதன் மீது> இந்தக் கொழுப்பைத் தடவி வைத்துவிடுவர். ஆட்டுக் கொழுப்பின் வாடையை நரி மோப்பம் பிடித்துக்கொண்டு வந்து அதனைக் கடிக்க, தலைவெடித்துச் சிதறிவிடும். கொக்கு நீர்வாத்து> குயில்> கானாங்கோழி> செம்பூத்து> நாரை முதலிய பறவைகளும் வேட்டையில் கிடைக்கின்றன. நாட்டு வெடியால்,; நரி காட்டுப்பன்றி, காட்டுப்பூனை முதலியவற்றையும் வேட்டையாடுகின்றனர். நரிக்குறவர்கள் துப்பாக்கியை அரசின் அனுமதியுடன்; பயன்படுத்துகின்றனர். மேலும் இவர்களின் முக்கியமான தொழிலாக வேட்டையாடுதல்> தேனெடுத்தல்> பச்சை குத்துதல்> நாட்டு வெடிமருந்து தயாரித்தல்> கடைகளில் பொருட்களை விற்பனை செய்தல் வாயிலாகத் தங்கள் வாழ்க்கையைக் கடத்தி வருகின்றனர்.

**பெண்களின் தொழில்கள்:**

ஆண்கள்> பெண்களைவிடக் குறைவாக உழைக்கின்றனர். சமையல் நேரங்கள் தவிர மற்ற அனைத்து நேரங்களில் மணிகள் கட்டுகின்றனர். ஒரு நிமிடத்தைக் கூட வீணடிக்காமல்> கட்டிக்கொண்டே அங்கேயும்> இங்கேயும் அலைகிறார்கள். மேலும் ஊர்> ஊராய்ச் சென்று மணி> சீப்பு, ஊசி> ஊக்கு போன்ற பொருட்களை விற்பனை செய்கின்றனர். ஆண்களுக்கு வேட்டையின் மூலம் பறவைகளும்> விலங்குகளும் அகப்பட்டால் மட்டுமே வருமானம் கிட்டும். அந்த நாட்களில் பெண்களே குடும்பத்தை நடத்துகின்றனர். இவர்களின் முக்கியமான தொழிலாக மணிகட்டி விற்றல்> கடைகளில் பொருட்களை வாங்கி விற்றல்> இடுமுடி கட்டி விற்றல்> பச்சை குத்துதல்> குறி சொல்லுதல் ஆகியவற்றைச் செய்து வருகின்றனர். மட்டுமின்றி பலூன்> அரைநாண்கயிறு> சாமிபடம் கிட்டி பொம்மை> விளையாட்டுப் பொருட்கள்> முகம்பார்க்கும் கண்ணாடி> குங்குமம்> பவுடர்> ரப்பர் போன்றவற்றையும் விற்கின்றனர்.

“இதுமாதிரியான பொருட்களை வாங்கி விற்பதற்காக அரசு கடனுதவி வழங்கி வருகிறது. முன்னர் தனியாரிடம் வட்டிக்குப் பணம் வாங்கி அதைத் திருப்பித் தர இயலாத காரணத்தினால் தற்பொழுது அவர்கள் கொடுக்க மறுக்கின்றனர். ஏனெனில் வட்டிக்கு பணம் வாங்கித் தொழிலை நடத்துவதன் வாயிலாக கிடைக்கும் வருமானம் வயிற்றுப்பசிக்கு மட்டும் தான் சரியாக உள்ளது. இதனைக் கொண்டு எவ்வாறு கடன் அடைப்பது> நல்ல துணிகள் உடுத்துவது> குழந்தைகளை எவ்வாறு பார்த்துக் கொள்வது என்று வினவுகின்றனர்.”5

தேவராயநேரி காலனியில் வசிக்கும் நரிக்குறவர்களுகுகும் அரசு ரூ. 10>000 முதல் ரூ. 1>00>000 வரையிலும் கடனுதவி செய்கின்றது. இருந்த பொழுதில் மற்ற தொழிலை யாரும் செய்யவில்லை. “அதற்கு அவர்கள் தெரியாத தொழிலைச் செய்து நட்டமடைவதைக் காட்டிலும்>

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in *DOI:* https://doi.org/10.63300/tm07042026.12

தெரிந்தத் தொழிலைச் செய்துவிடலாம் என்று காரணம் கூறுகின்றனர்."6

பொருளாதாரத்தைக் கொண்டு குடும்பத்தைக் காப்பதில் இருவரின் பங்கும் அமைந்துள்ளது. பள்ளிகள்> கல்லூரிகள்> திருவிழாக்கள்> பேருந்துகள்> மாநாடு> கடைத்தெரு போன்ற இடங்களிலும் தொழிலை நடத்துகின்றனர்.

**கல்வி**

நரிக்குறவர்கள் அனைவரும் பொருளாதாரப் பின்னடைவின் காரணமாக எழுத்தறிவில்லாதவர்களாக இருக்கின்றனர். அவர்களின் மொழியான வாக்ரி போலியையும்> தமிழ் மொழியையும் பேசுகின்றனர். தேவராயநேரியில் சிறுவர்> சிறுமியருக்காகப் பாடச்சாலை அமைக்கப்பட்டுள்ளது. பள்ளி இறுதிவரை படிக்கும் மாணவர்கள் குறைந்தபட்சம் பெற்றோர்களிடமிருந்து பிரிந்து தங்கிப் படிப்பதற்கு விடுதியும் அமைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது தேவராயநேரில் படித்தவர்களின் எண்ணிக்கை அதிகமாகிவிட்டது. இவர்களுள் திரு. மகேந்திரன் திரு. ராமச்சந்திரன் போன்றோர் பத்தாம் வகுப்புவரை படித்திருந்தாலும் அம்மக்களுக்காகச் சிறைச்சாலையும் சென்றுள்ளனர். திரு. சிவக்குமார். சாமுவேல், ஆனந்தபாபு போன்றோர்கள் எல்.ஐ.சியின் முக்கியத்துவத்தையும்> பயன்பாட்டையும் எடுத்துரைத்துள்ளனர். Narikuravargal Educational Society என்னும் பெயரில் உருவாக்கப்பட்டுள்ள இந்த அமைப்பு நரிக்குறவர்களின் அறியாமையை அகற்றி> மற்ற சமுதாயத்தினரைப் போல செயல்பட வழிவகுக்கிறது. “மாணவன் ஒருவன் திருச்சி தூயவளனார் கல்லூரியில் பி.காம். பட்டப்படிப்பும்> இரு மாணவிகள் புனித அன்னாள் மேல்நிலைப்பள்ளியிலும் படிக்கின்றனர். கிறிஸ்தவர்களின் தாக்கங்கள் அதிகமாக இருப்பதால் நான்கு> ஐந்து குடும்பங்கள் கிறித்தவர்களாக மாறியுள்ளனர்"7. என்று தகவலாளர் குறிப்பிடுகின்றார்.

**குடும்ப அமைப்பு**

நரிக்குறவர்கள் மற்ற சமூகத்தினரைப் போல இல்லாவிடினும் பெற்றோர்களையும்> உடன்பிறந்தவர்களையும் கவனிப்பதில் அதிகம் அக்கறை எடுத்துக்கொள்கின்றனர். நரிக்குறவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது. ஏனென்றால் குழந்தைகளை அதிகமாகப் பெற்றுக் கொள்கின்றனர். பிற சமூகத்தினர் வயதான முதியவர்களைப் பாரமாகக் கருதி முதியோர் இல்லத்தில் சேர்க்கின்றனர். முதியவர்களைத் தொழிலுக்கு அனுப்பாமல் சிறுவயதிலேயே தொழிலுக்குக் குழந்தைகள் செல்கின்றனர். தன்னுடைய திருமணத்திற்காக அவனே சம்பாதிக்கத் தொடங்கிவிடுகிறான். அதுவரை பெற்றோர்களின் கண்கானிப்பில் வளர்ந்த குழந்தைகள் தன்னிச்சையாக சம்பாதிக்கத் தொடங்குகின்றனர். நரிக்குறவர்கள்

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI:* https://doi.org/10.63300/tm07042026.12

கூட்டுக்குடும்பமாகத் தான் வாழ்கின்றனர். கூட்டுக் குடும்பம் அதிகமான பிரச்சனையைத் தந்தாலும்> தன்னுடைய குழந்தைக்குத் திருமணம் செய்து வைத்து அவர்களை தனியாக வைக்கும் எண்ணம் அவர்களிடம் என்று இல்லை. ஏனெனில் ஆணாகயிருந்தாலும்> பெண்ணாகயிருந்தாலும் அவர்களின் வாயிலாகக் கிடைக்கும் வருமானம் குறைந்துவிடும் என்று கருதுகின்றனர். குடும்பத்தில் கூட்டுக்குடும்பம் சலசலப்பினை ஏற்படுத்தினாலும்> முதியோர்கள் என்பதால் அவர்களின் வார்த்தைகள் முக்கியமாகக் கருதப்படுகின்றன. இன்றைய இளைஞர்களும் அவர்களின் வார்த்தையைக் கேட்கின்றனர். முதியவர்கள் வகுத்துள்ள கோட்பாட்டைப் படித்தவர்களும் மதித்துக் கடைபிடிக்கின்றனர்.

கணவனை இழந்த நரிக்குறத்தியும்> மணைவியை இழந்த நரிக்குறவனும் மறுபடியும் திருமணம் செய்துகொள்கின்றனர். வயதானவர்களும்> பேரன்> பேத்தி எடுத்தவர்களும்கூட திருமணம் செய்துகொள்கின்றனர். இவர்களுக்கிடையில் ஒருவனுக்கு ஒருத்தி> என்ற கோட்பாடு கிடையாது. ஒரு பெண்> பல ஆண்களையோ> ஒரு ஆண் பல பெண்களையோ திருமணம் செய்கின்றனர். இவர்களுக்கிடையில் தனித்து வாழும் தன்மை கிடையாது. இருப்பினும் அவர்கள் சாமிக்குப் பயந்துதான் வாழ்கின்றனர். நரிக்குறவர்களின் பெண்கள் அதிகமான திருமணங்கள் செய்து கொண்டாலும் தொழிலுக்குச் சென்ற பெண்கள் மாலை ஆறு மணிக்குள் வீட்டிற்கோ> அவர்கள் தங்கியிருக்கும் இடத்திற்கோ வந்துவிட வேண்டும். பெரும்பாலும் வெளியில் இரவில் தங்குவதைத் தவிர்த்து விடுகின்றனர். அவ்வாறு யாரிடமும் சொல்லாமல் இரவில் தங்கிவிட்டால் கற்பு தவறியவள் என்று குற்றம் சாற்றுகின்றனர். இதற்காக அவர்கள் கூட்டத்தில் முதியவரானவரும், தலைவரும் நீண்டக் கம்பியைப் பழுக்கக் காய்ச்சி அவற்றைச் சாமிக்குமுன் பிடிக்கச்; சொல்வார்கள். கற்பு தவறியவளாக இருந்தால் அவளால் அக்கம்பியைப் பிடிக்க இயலாது என நம்புகின்றனர். தற்பொழுது தொழிலின் காரணமாகப் பல வெளியூருக்குச் சென்று தங்க வேண்டிய சூழநிலை ஏற்படுகிறது. மேலும் திருமணம் ஆகிய பெண் பஞ்சாயத்தின் மூலம் விவாகரத்து பெற்ற பின்னரே அடுத்த ஆணைத் திருமணம் செய்ய முடியும்.

**ஆண்களின் நிலை**

குடும்பத்தை ஆண்களே நடத்தவேண்டிய ஏற்படுகிறது. இதனால் சிறுவயதிலே சூழல் தொழில் கற்றுக்கொள்கின்றனர். ஆண்கள் குழந்தைப் பருவத்திலேயே மூன்று முறை மொட்டையடித்துக் குடுமி வளர்க்கின்றனர். குடுமி வைத்தவர்கள் மட்டும் சாமிக்குச் செய்யும் பூசையில் கலந்துகொள்ள முடியும். ஒரு குடும்பத்தில் இரண்டு அல்லது மூன்று ஆண் குழந்தைகள் இருக்குமாயின்> நாகரீகம் காரணமாகச் சிலர் குடுமி வைக்க மாட்டார்கள்.

அதுமாதிரியானவர்களுக்குச் சாமிச் சொத்தில் பங்கு கிடையாது என்கின்றனர். பெரும்பாலானோர் மீசை வைத்துக் கொள்கின்றனர். சிலர் மீசை வைப்பதில்லை. சாமி சொத்து இல்லாதவர்கள் பூசை நடத்தும்போது அருள் வந்து ஆடவோ. பூசையில் கலந்துகொள்ளவோ> பஞ்சாயத்து செய்யவோ> பிற சடங்குகளை முன்னின்று நடத்தவோ முடியாது. இவைபோன்ற காரணங்களால் குடுமிவைத்திருக்கின்றனர். தற்பொழுது திரைப்படத்தின் தாக்குதலால் குடுமி வைப்பதைக் குறைத்துள்ளனர்.

**பெண்களின் நிலை**

பெண்கள் குடும்பத்தை நடத்துவதிலும்> ஆண்கள் கொண்டுவரும் பொருளாதாரத்தைச்; சிக்கனமாக செலவு செய்வதிலும் பெரும் பங்கு வகிக்கின்றார்கள். ஒரு பெண் ஆண்களை மணந்து குழந்தைகளைப் பெற்று தருகிறாள்.

குழந்தையைப் பெற்றெடுப்பது சுலபமான காரியம் அல்ல குழந்தையைக் கருத்தரிக்கும் போதும்> பெற்றெடுக்கும் போரும் பெற்ற குழந்தையைக் காத்து வளர்க்கும் போதும் பெண்களைப் போல் நரிக்குறவர் பெண்களும் பல இன்னல்களை அனுபவிக்கின்றவர். பெண் என்பவள் அடக்கப்பட்டு வருகிறாள். வேலைகள் செய்தல்> சமைத்தல்> விறகு சேகரித்தல்> நிர் எடுத்தல் போன்ற வேலைகளைச் செய்ய வேண்டும். பேறு காலத்தில் மட்டும் அத்தனை வேலைகளையும் கணவன் செய்கிறான். குழந்தைகளைப் பத்துமாதம் வரை கமப்பதோடு மட்டுமில்லாமல்> வீட்டில் இருக்கும் முதியவர்களுக்குத் தொந்தரவு கொடுக்க விரும்பாததால். கைக்குழந்தைகளுக்குப் கொடுக்கும் காரணத்தாலும் வெளியே அலையும் போதும்> தொழிலுக்குச் செல்லும் போதும் சங்காரு போலத் தன்குழந்தையினைக் கட்டிக் கொள்கின்றனர். குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றி அறியாமலும்> பெண் பல ஆண்களைத் திருமணம் செய்யும் சூழல் உள்ளதாலும் பொருளாதாரத்தின் காரணமாகவும்> அதிக குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. “வேறொருவரை மணக்கும் பொழுது, குழந்தை பெற்று கொடுக்கும் தகுதி இருக்க வேண்டும் என்பதற்காகக் குடும்பக்கட்டுப்பாடு செய்துக் கொள்ள யாரும் விரும்புவதில்லை.”8

சிறுவயதிலேயே திருமணம் நடைபெற்றுவிடும். ஆடிப்பாடித்திரிகின்ற 14. 15 வயதுக்குள்ளேயே திருமணம் செய்துவைத்துவிடுகின்றனர். சிறுவயதில் திருமணம் செய்வதால் கரு சரியாகத் தங்காமல்> உடல் மெலிந்து காணப்படுகின்றனர். இச்சூழலில் உதிரப்போக்கு காணப்படுவதால் அவற்றின் வலியைத் தாங்கிக்கொள்ள கள்> சாராயம் போன்றவற்றைக் குடிக்கப் பழகிக்கொண்டிருக்கிறார்கள். பிரசவத்தின் போது ஏற்படும் வலியைத் தாங்குவதற்கும் இச்செயலைச் செய்கின்றனர். வயிற்றுக்கு உணவு இல்லாத நேரத்தில் கூட> பிச்சையெடுத்துத் தன்

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI:* https://doi.org/10.63300/tm07042026.12

குழந்தையைக் காப்பாற்றுகின்றனர். குழந்தைகளைப் பெற்றவுடன் மற்றவர்களைப் போல வெயில் அடிக்காமல் கடிக்காமல், ஈ> எறும்பு கடிக்காமல் பாதுகாத்து வளர்க்கின்றனர். மரத்தின் நிழலிலேயே வாழ்வதால் தாயும் சேயும் நல்ல ஆரோக்கியத்துடன் வாழ்கின்றனர். இதனால் குழந்தைகளுக்கு> வயிற்றுப் போக்கு> காய்ச்சல்> வாந்தி போன்ற பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்பில்லை. மேலும் இவர்கள் எதையும் பதுக்காமல் கிடைக்கின்ற அனைத்தையும் தின்பதால்> குழந்தைகளும் இவர்களும் நல்ல சத்துள்ளவர்களாகத் திகழ்கின்றனர். அதனுடன் தம்முடைய குலத்தொழில்களையும் கற்றுக் கொடுத்துவிடுகின்றனர் குழந்தைகள் நடக்கும் பருவத்தில் கூட வழிப் போக்கர்களை மறித்துக் காசு கேட்டு விடுகிறனர்.

சமுதாயத்தில் பெண் குழந்தைகள் பெற்றால் செல்வு என்றும்> ஆண்குழந்தைகளைப் பெற்றால் வரவு என்றும் கருதுகின்றனர். இதனால் ஆண் குழந்தைகளையே அதிகமாக எதிர்பார்க்கின்றனர். இவற்றிற்கு நேர்மாறாக நரிக்குறவர்களிடையே காணப்படுகிறது. அங்குப் பெண்குழந்தைகளைப் பெற்றால் வரவு என்றும். ஆண் குழந்தைகளைப் பெற்றால் செலவு என்றும் எண்ணிப் பெண் குழந்தைகளைப் பெற்றால் தான் அதிகமாக சந்தோசப்படுகிறார்கள் ஆண்கள், பெண்களைத் திருமணம் செய்யும் பொழுது பரிசுப் பணம் கொடுத்துச் செய்ய வேண்டும். அதனோடு திருமணச் அனைத்தும் செலவுகள் ஆண் வீட்டாரையே சேர்ந்தது. இதனால்தான் ஆண் என்பவன் சிறிய வயதிலேயே சம்பாதிக்கத் தொடங்குகிறான் நரிக்குறவர்கள் சமுதாயத்தில் பெண்களின் பிறப்பு உயர்வாகக் கருதப்பட்டாலும் சாமி மூட்டையான தூபக்கால், தாம்பளத்தட்டு> சாமி உருவங்கள் ஆகியவற்றைப் பெண்கள் தொடுதல கூடாது என்கின்றனர.; இத்தகு செயல்களின் மூலம் பெண்களை அடிமைப்படுத்துவதை அறிந்துகொள்ளமுடிகிறது. இதற்குக் காரணமாக மாதவிடாய் கூறப்படுகிறது. இதனால் தெய்வத்தின் புனிதத் தன்மை கெட்டுவிடும் என்கிறார்கள். நாற்காலியில் அமர்நதிருக்கும் பொழுது பெண்கள் பக்கத்தில் அமரமாட்டார்கள். தரையில் தான் அமர்வார்கள். இந்தப் பழக்கம் முன்னோர்களாலும், முதியவர்களாலும் தற்போதும் பின்பற்றப்பட்டு வருகின்றது.

மேலும் அவர்கள் கூட்டத்தில் யாருடைய வீட்டிலும் நல்ல நிகழ்ச்சியோ> கெட்ட நிகழ்ச்சியோ நடந்தால் அனைவரும் தொழிலுக்குச் செல்லமாட்டார்கள். அங்கு நடக்கும் வேலைகளை> தம்முடைய வீட்டில் நடக்கும் நிகழ்ச்சியாக எண்ணிக்கொண்டு அனைத்து வேலைகளையும் செய்கின்றனர். மேலும் இவர்களின் சுறுசுறுப்பை மணிகட்டுதல் வாயிலாகத் தெரிந்து கொள்ளலாம். பஞ்சாயத்தில் பெண்களின் பங்கு குறைவாகவே உள்ளது. பெண் குற்றவாளியாக உள்ளபோதுதான் தண்டனைக்காக நிறுத்தப்படுகிறார்கள். ஆனால்

Tamilmanam

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI:* https://doi.org/10.63300/tm07042026.12

நரிக்குறவர்கள் சமுதாயத்தில் ஆண்களைப் போன்றே பெண்களும் மறுமணம் செய்துக் கொள்ளும் வாயப்பு இருப்பினும், பஞ்சாயத்து முன் விவாகரத்து பெற்ற பின்னரே செய்துக் கொள்ள முடியும் என்பது நரிக்குறவர் இவத்தாரின் சமூக ஒப்பந்தங்களில் ஒன்றாக உள்ளது.

**சிறுவர் சிறுமியர் நிலை**

நரிக்குறவர்களின் பெண் குழந்தைகள் பெரும்பாலும் அரமுடியுடன் அலைவார்கள் ஆண்குழந்தைகள் வெறுமனவே ஆடையின்றி இருக்கின்றனர் சிறுவயதிலேயே மொட்டை அடித்தும்> கழுத்திலும்> இடுப்பிலும் மணிகளை அணிந்திருப்பதால் ஆண் குழந்தை என்றும்> பெண்குழந்தை என்னும் வேறுபாடு காண்பதற்குக் கடினமாக உள்ளது. நரிக்குறவர் பெண்கள் இளம் வயதிலேயே திருமணம் செய்வதால்> சீக்கிரம் குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. சிறுவர், சிறுமியர் ஆடையின்றியும் தலைசீவாமலும்> அழக்கு படிந்திருக்கும் முகங்களுடன் காணப்படுகின்றனர். சில சிறுமியர்கள் பாவாடை சட்டையுடன்> மேலேதாவணி போன்று துணியைப் போட்டுக் கொள்கின்றனர். காலையில் பற்களைத் துலக்கச் சாம்பல்> செம்மணதூள் ஆகியவற்றைப் பயன்படுத்துகின்றனர். சிலர் வேப்பமரத்தின குச்சியைப் பயன்படுத்துகின்றனர்.

சிறுவயதில் கள்ளச்சாராயம் போன்றவற்றையும் குடிக்கக் கற்றுக் கொள்கின்றனர். திரையிசைப் பாடல்களையும் நரிக்குறவப் பாடல்களையும் பாடி ஆடுகின்றனர். இவைமட்டுமில்லாமல் சிறுவர்கள் தெருக்களில் பிச்சையெடுக்கச் சென்றாலும், பேருத்துகளில் பயணம் செய்யும் பொழுதும் மற்ற சமுதாயத்தினர் பயப்படுகின்றனர். பக்கத்தில் இருப்பவர்களுக்குத் தாங்கள் தயாரிக்கும் மையைத் தடவி அவர்களைச் செயலிழக்கச் செய்கின்றனர். தெருக்களில் வரும்பொழுதும் ஆட்கள் இல்லாத இடத்தில் பொருட்கள் கிடந்தால் அவற்றை எடுத்துச் சென்றுவிடுகின்றனர்.

**வாழ்க்கைச் சுழற்சி**

நரிக்குறவர்கள் தம் வாழ்க்கையைப் பின்வரும் வாழ்க்கை சுழறசி முறையில் அமைத்துக் கொள்கின்றனர்.

| மாதங்கள் | விற்பனை இடங்கள் ஃ கோயில் தலங்கள் | தங்கும் நாட்கள் |
|---|---|---|
| சித்திரை | விழுப்புரம் புளிச்சனூர்> கோலியங்கனூர் | ஒருவாரம் |

Tamilmanam

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI:* https://doi.org/10.63300/tm07042026.12

| | | |
|---|---|---|
| வைகாசி | கிராமங்களில் மாரியம்மன் கோவில் திருவிழா | ஒருவாரம் |
| ஆனி | பேருந்து நிலையம்> கல்லூரி வாசல்> கடைவீதிகள்> திரையரங்கம் வாசல் போன்ற இடங்களில் கடை போடுவர் | எல்லா நாட்களிலும் |
| ஆடி | அனைத்துக் கோவில்களிலும் ஆடித்திருவிழா | ஒரு மாதம் |
| ஆவணி | பேருந்து நிலையம்> கல்லூரி வாசல் கடைவீதிகள்> பஜார் | எல்லா நாட்கள் |
| புரட்டாசி | வேட்டையாடுதல் | எல்லா நாட்களிலும் |
| ஐப்பசி | தீபாவளிக் காலத்தில் கிராமங்களுக்குகுச் செல்லுதல் | ஒரு வாரம் |
| கார்த்திகை | ஐயப்பன் கோவிலுக்குச் செல்லுதல் | ஒரு மாதம் |
| மார்கழி | ஐயப்பன் கோவில்> முருகன் கோவிலுக்குச் செல்லுதல் | ஒரு மாதம் |
| தை | பொங்கல் காலத்தில் மற்றும் ஆங்கில வருடப்பிறப்பு நேரத்தில் தெருக்களில் சென்று விற்பனை செய்தல். | ஒரு வாரம் |
| மாச | பாலையனூர்> திருக்காஞ்சி செல்லுதல் அங்கு ஆற்றுத் திருவிழா நடைபெறும் | ஒரு மாதம் |
| பங்குனி | பழனி> முருகன் கோவில்> தெருக்களில் உள்ள முருகன் கோவில்களில் உத்திரம் மிகவும் விஷேசமாக நf்பெறும். | ஒரு மாதம் |

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI:* https://doi.org/10.63300/tm07042026.12

**பொழுதுபோக்குகள்**

அரசாங்கத்தில் நரிக்குறவர்களுக்குத் தொலைக்காட்சிப் பெட்டி கொடுப்பதற்கு முன்னர், கல்வியறிவு குறைவாக இருந்தாலும் திரைப்படத்தின் தாக்கம் அதிகமாக இருந்தது.

பழங்காலத்தில் திரைப்படங்களில் கதைநாயகனாகத் திகழ்ந்த வம்.ஜி.ஆர். ஜெயலலிதா போன்றவர்களின் படத்தை விரும்பிப் பார்த்தனர். அவர்கள் மீது உள்ள மதிப்பால் அவர்களின் பெயர்களையும் பயன்படுத்திய சின்னமான இரட்டைஇலை என்ற படத்தையும் தம் கையில் பச்சைகுத்திக் கொண்டனர். தற்பொழுது அதிகமாகத் திரைப்படங்களில் வரும் கதாநாயகிகளின் பெயர்களை வைத்துக்கொள்கின்றனர். அவர்களைப் போல பாடவும்> ஆடவும்> ஆடைகள் உடுத்தவும் விரும்புகின்றனர்.

மேலும் ஆண்> பெண் என்று பாராமல் சீட்டுகள்> தாயம்> பல்லாங்குழி விளையாட்டுகளை விளையாடுகின்றனர். நாகரிகத்தின் விளைவால் அனைவரின் வீட்டிலும் சிடி பிளேயர் உள்ளது. திரையரங்கிற்குச் செல்வதைத் தவிர்த்து> வெளிவரும் அனைத்துப் படங்களையும் பார்க்கின்றனர்.

**தொகுப்புரை**

நரிக்குறவர்கள் பெரும்பாலும் அசைவ உணவுகளையே உண்ணுகின்றனர். வேட்டி அணிந்தவர்களாக ஆண்களும் அரைப்பாவாடை> தாவணி அணிந்தவர்களாகப் பெண்களும் காணப்படுகின்றனர் குழந்தைகள் அரைநிர்வாணமாகவோ> நிர்வாணமாகவோ காணப்படுகின்றனர.; பாசிமணிகளைப் பல வண்ணங்களில் அணிந்திருப்பர். ஆண்கள் வேட்டையாடுதலையும் பெண்கள்; பாசிமணி தயாரித்து விற்றலையும்; முக்கதியத் தொழிலாகக் கொண்டுள்ளனர். ஓரிருவரைத் தவிர கல்வி நிலையில் பெரும்பாலும் அறிமுகமற்றவர்களாகவே உள்ளனர்.

**சான்றெண் விளக்கம்**

[1.] அரு. மருததுரை ‘நாட்டுப்புறப் பண்பாட்டுக் கூறுகள்’> அருணா வெளியீடு> திருச்சிராப்பள்ளி> முதற்பதிப்பு – 2003 ப.102.

[2.] எஃபி பாக்யமேரி> ‘தமிழர் பண்பாடு பயன்பாடும்’ அஞ்சனச்சிமிழ்ப் பதிப்பகம்> சென்னை> முதற்பதிப்பு – 2006 ப.38

[3.] மேலது. ப.42

[4.] கரசூர். பத்மபாரதி> ‘நரிக்குறவர் இனவரைவியல்’ ப.62

[5.] நேர்காணல்: மாணிக்கம்> தேவராயநேரி> 3 மார்ச் 2009.

[6.] நேர்காணல்: லெட்சுமி> தேவராயநேரி> 3 மார்ச் 2009.

[7.] நேர்காணல்: ரவிச்சந்திரன்> தேவராயநேரி> 3 மார்ச் 2009.

[8.] நேர்காணல்: வசந்தி> தேவராயநேரி> 3 மார்ச் 2009.